SriLankan Airlines

member of oneworld

**(PB 67)**

**பங்குடமையாளர்களுக்கான சுற்றறிக்கை – அதிவிசேட பொதுக் கூட்டம்**

கனம் பங்குடமையாளர்களுக்கு

**கூறப்பட்ட மூலதனத்தினை அதிகரித்தல் மற்றும் அமைப்பு அகவிதிகளுக்கான திருத்தம்**

1. <u>கூறப்பட்ட மூலதனத்தினை அதிகரிப்பதற்காக இல.ரூ.5 பில்லியன் பெறுமதிக்கு இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளை ஒதுக்குதல்</u>

2024 மாச்சு 18ஆம் திகதியன்று அமைச்சரவையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பங்குரிமை மூலதன உள்ளீட்டு திட்டத்தின் நியதிகளில் (அமைச்சரவைப் பத்திர இலக்கம் 24/0551/604/054-I) இலங்கை அரசாங்கம், சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் குறிப்பிட்ட படுகடனை இலங்கை அரசாங்கத்திற்கு மாற்றல் செய்யும் நோக்குடன் சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டிற்கு மேலதிகப் பங்குரிமை மூலதனத்தினை முதலீடு செய்தது. இதன் முதலீட்டுப் பெறுமதி இல.ரூ.5 பில்லியனாகும். இதன்படி, கம்பனி தற்பொழுது இம்முதலீட்டினை அங்கீகரிக்கின்ற விதத்தில், கொடுக்கல்வாங்கல் பெறுமதிக்கு இலங்கை அரசாங்கத்திற்கு புதிய பங்குகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்நோக்கத்திற்காக, பங்கொன்று இல.ரூ.100 என்ற அடிப்படையில் 50 மில்லியன் புதிய சாதாரண பங்குகளை உருவாக்குவதன் மூலம் கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தினை இல.ரூ.198,860,665,500 இலிருந்து இல.ரூ.203,860,665,500 இற்கு அதிகரிப்பது அவசியமானது எனக் கருதப்படுகிறது.

எயார்லையினின் தற்போதைய எதிர்க்கணியமான சொத்து தொடர்பான விளக்கத்தினை பெற்ற பின்னர், நிதி அமைச்சு, பங்கொன்று இல.ரூ.100 எனப் பேரம்பேசப்பட்ட விலையினை ஏற்றுக்கொண்டது.

கம்பனியின் அமைப்பு அகவிதியின் உறுப்புரை 9 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய கம்பனிச் சட்டத்தின் 53ஆம் பிரிவினால் பங்கு வழங்கல் தொடர்பில் தற்போதுள்ள பங்குடமையாளர்களுக்கு முன்கூட்டிய உரிமையினை வழங்க முடியாது என்பது பரிசீலனைக்குரிய விடயமாகவுள்ளது. எனவே, இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் இல.ரூ.5 பில்லியன் தொகை கொண்ட கொடுக்கல்வாங்கல்களின் சந்தைப் பெறுமதியினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளை ஒதுக்குவதற்கு கம்பனி அனுமதிக்கப்பட்டது.

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 52ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளில் பணிப்பாளர் சபை பங்குகளைப் பங்கொன்று இல.ரூ.100 இல் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு தீர்மானித்திருக்கிறது என்பதுடன், பணிப்பாளர்கள், அத்தகைய தீர்மானம் கம்பனிக்கும் தற்போதுள்ள அனைத்துப் பங்குடமையாளர்களுக்கும் சரியானதும் நியாயமானதுமாகும் என்ற கருத்தினைக் கொண்டிருக்கிறார்கள்.

புதிய சாதாரண பங்குகளின் வழங்கலின் பின்னர் கம்பனியின் பங்குடமை பின்வருமாறு இருக்கும்:

| | பங்குகளின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| இலங்கை அரசாங்கம் | 2,034,006,469 | 99.77% |
| ஊழியர் சேமலாப நிதியம் | 1,863,676 | 0.09% |
| மக்கள் வங்கி | 1 | 0.00% |
| ஏனையவை | 2,736,509 | 0.13% |

2. <u>இலத்திரனியல் தொடர்பூட்டலை அங்கீகரிக்கின்ற விதத்தில் அமைப்பு அகவிதிக்கு திருத்தங்களைச் செய்தல்</u>

உலகளாவிய நோய்த்தொற்றான கொவிட் மற்றும் அதன் பின்னர் இலங்கையில் நிலவிய பொருளாதார மற்றும் அரசியல் சூழல்கள் உட்பட பல்வேறு வெளிப்புறச் சூழ்நிலைகளின் காரணமாக, 2022ஆம் ஆண்டிலிருந்து "வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் மற்றும் அரசிற்குச் சொந்தமான கம்பனிகளின் செலவின முகாமைத்துவம் மற்றும் வியாபார உறுதித்தன்மை" தொடர்பானீநுனு சுற்றறிக்கை இலக்கம் 04/2022 இற்கு அமைவான விதத்தில் கம்பனிகளின் அமைப்பு அகவிதியினைத் திருத்துவதற்கு பங்குடமையாளர்களின் ஒப்புதலைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், கம்பனி அதன் ஆண்டுப் பொதுக் கூட்டத்தினையும் அதிவிசேட பொதுக் கூட்டத்தினையும் மெய்நிகர்/ கலப்பு கூட்டங்களாக நடத்தியது.

நேரம் மற்றும் செலவு ஆகிய இரண்டு நியதிகளிலும் பொதுக் கூட்டத்தினை நடத்துவதிலுள்ள நிருவாக இடர்ப்பாடுகளை வெற்றி கொள்வதற்கு பணிப்பாளர் சபை கம்பனியின் அகவிதிகளிலுள்ள 'எழுத்திலுள்ளவை' அல்லது 'எழுதப்பட்டவை', 'உறுப்பினர்' மற்றும் 'பங்குடமையாளர்' என்ற சொற்களுக்கான பொருள் விளக்கத்தினை திருத்தும் நோக்கத்துடனும் தற்போதுள்ள உறுப்புரைகள் 52, 54 மற்றும் 155 – 161 என்பனவற்றிற்குப் பதிலீடாக, கூட்ட அறிவிப்பில் தெளிவுபடுத்துகின்ற அமைப்பு அகவிதிகளை உள்ளீடு செய்ய முன்மொழிகிறது.

இதற்கமைவாக, பணிப்பாளர் சபை, கம்பனியின் **மெய்நிகர் அதிவிசேட பொதுக் கூட்டமொன்றினை** இங்கே இணைக்கப்பட்டுள்ள கூட்ட அறிவித்தலில் எடுத்துக்காட்டப்பட்டவாறு, சாதாரண தீர்மானங்களையும் விசேட தீர்மானங்களையும் பரிசீலிப்பதற்குப் பொருத்தமானதாகக் காணப்படுமிடத்து அவற்றை நிறைவேற்றுவதற்கு முன்னர் **2024 யூன் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு** சிறிலங்கன் எயார்லையின் லிமிடெட்டின் பணிப்பாளர் சபை அறையிலிருந்து கூட்டுவதற்கு தீர்மானித்திருக்கிறது.

**மெய்நிகர் கூட்டம்**

அனைத்துப் பங்குடமையாளர்களும் நிகழ்நிலையொன்றினூடாக அதிவிசேட பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு அழைக்கப்படுகின்றனர். நீங்கள் பதிவுசெய்தல் படிவத்தினைப் பூர்த்திசெய்து, கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமான சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட், எயார்லையின் சென்ரர், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கா என்ற முகவரிக்கு அல்லது

comsec@srilankan.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அல்லது தொலைநகல் மூலம் (+94)-197335112 அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். அதிவிசேட பொதுக் கூட்டத்தினைக் கூட்டுவதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு நாற்பத்தெட்டு (48) மணித்தியாலங்களுக்குக் குறையாமல் இவற்றினைக் கம்பனி பெற்றுக்கொள்வதனை இயலுமைப்படுத்தும் பொருட்டு இதனை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிலாள் படிவமும் பதிவுசெய்தல் படிவமும் www.srilankan.com இல் கிடைக்கிறது.

புகுபதிகை தகவல்கள் தனிப்பட்ட பங்குடமையாளர்கள், பதிலாட்கள் மற்றும் நிறுவன ரீதியான பங்குடமையாளர்களைப் பொறுத்தவரையில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோர் பயன்படுத்துவதற்கு மாத்திரம் அதிகாரமளிக்கப்படும் என்பதுடன் இவை தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கு கம்பனி பொறுப்புடையதாகவோ பொறுப்பானதாகவோ இருக்கமாட்டாது. உரிய பதிலாட்களைப் பொறுத்தவரை பங்குடமையாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட செல்லுபடியான பதிலாட்களுக்கு மட்டுமே புகுபதிகை தகவல்கள் பகிரப்படும் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

கூட்டத்தில் கலந்து கொள்ளமுடியாத பங்குடமையாளர்கள் பணிப்பாளரொருவரைத் தமது பதிலாளராக நியமிக்குமாறும் நிகழ்ச்சிநிரல் விடயங்கள் தொடர்பில் அவர்களது முன்னுரிமைகளை அடையாளமிட்டுக் கொள்ளுமாறும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

பங்குடமையாளர்கள் ஏதேனும் விசாரணைகள் இருப்பின், அவற்றைக் கம்பனியின் செயலாளரது அலுவலகத்திற்கு அல்லது comsec@srilankan.com என்ற முகவரிக்கு, கம்பனிச் செயலாளர், இவற்றினைத் தொகுத்து பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு அவற்றை அனுப்பி வைப்பதற்கும் பணிப்பாளர் சபை அது தொடர்பில் பேசுவதற்கும் போதுமான நேரத்தினைக் கொண்டிருக்குப்பதனை இயலச்செய்யும் விதத்தில் கூட்ட திகதிக்கு மூன்று நாட்கள் (03) முன்னதாக அனுப்பி வைக்க முடியும்.

**சபையின் கட்டளையின்படி**
**சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்**

**திருமதி. தல்றின் திருக்குமார்**
**கூட்டாண்மை செயலகச் சேவைகளின் குழுத் தலைவர்/ கம்பனிச் செயலாளர்**

2024 மே 17

குறிப்பு: இந்த தமிழ் மொழிபெயர்ப்பு , ஆங்கில ஆவணங்களிள் மொழிபெயர்ப்பாகும். மொழிபெயர்ப்பில் குழப்பங்கள் காணப்படுமிடத்து, ஆங்கில அறிக் மொழிபெயர்ப்பு பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.